

# பெட்டிசன் பெரியதம்பி

(குறு நாவல்)

பொன் குலேந்திரன் ( கனடா )

## ஆசிரியர் பேனாவில் இருந்து

தினமும் ஆயிரக் கணக்கில் பெட்டிசன் என்ற மனுக்கள் அரசு இலாக்காகளையும் , தனியார் நிறுவனத்தையும். சங்சங்களையும் போய் அடைகிறது. அங்கு சில மனுக்கள் குப்பைத் தொட்டிக்குள் போய் விடுகிறது. இன்னும் சில வழிமுறைகளை பின் பற்றி பெட்டிசன் போட்டவருக்கு பதில் கொடுக்க பல நாட்கள் எடுக்கும் சில பெட்டிசங்களை அதிக பணம் கொடுத்து வக்கீல் மூலம் சட்டரீதியாக பணம் கேட்டுப், பயமுறுத்தி எழுதுவோரும் உண்டு.

பெட்டிசன் எழுதுவது ஒரு தனிக் கலை. முதுகெலும்பு இல்லாதவர்கள் கையெழுத்து வைக்காமல் தாமே எழுதும் பெட்டிசனுக்கு மொட்டை கடிதம் என்பர . எழுத்துப் பிழைகளும், இலக்கணப் பிழைகளும் உள்ள மொட்டைக் கடிதம் யார் எழுதியது க் கண்டு பிடிப்பது இலகு. அந்த மொட்டைக் கடிதத்தில் இல்லாததும் பொல்லாதுமாய் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகள் இருக்கும்.

எப்படி பெட்டிசன் எழுத வேண்டும்..?

இன்றைய பெரும்பாலான இளைய தலைமுறையினருக்கு இருக்கும் தயக்கம் இதுதான்.

என்ன படித்துப் பட்டம் பெற்றிருந்தலும் தனக்குள்ள ஒரு பிரச்சணையை பிறர் புரிந்து கொள்ளும் வண்ணம் எளிமையாக எழுதுவதும், அதனை தீர்த்து வைக்க வேண்டுவதும் ஒரு கலைதான்.

நீங்கள் எழுதுகின்ற மனுவின் மூலமாக அதனை படிக்கும் அதிகாரியானவர், உங்களது பிரச்சணையை மிகத் தெளிவாக புரிந்து கொண்டால்தான் அதனை அவர் தீர்க்க முற்படுவார்.

உங்களது மனுமூலமாக உங்களுக்குள்ள பிரச்சணையை படிக்கின்றவர்களுக்கு, கண்ணாடியில் தனது முகத்தை பார்ப்பது போல, அது மிகத் தெளிவாக இருக்க வேண்டும்.

உங்களுக்குள்ள பிரச்சணை மற்றவர்களைவிட உங்களுக்குத்தான் மிக நன்றாகத் தெரியும். ஆகையால், அதனை நீங்கள் எழுதுவதுதான் நல்லது.

பக்கம் எண் எழுதுங்கள். முதலில் சுருக்கமாக தலைப்பை எழுதுங்கள். அதன் கீழ் அடிக்கோடிடுங்கள். பின்பு, உங்களது முகவரியை தெளிவாக எழுதுங்கள்.

அதற்குப்பின் பெறுநர் முகவரியை எழுதுங்கள். பெறுநர் முகவரியில் பெறுபவரின் பெயரை குறிப்பிட்டிருந்தால் அதற்கு முன் உயர்திரு என்றும், பெயருக்குப் பின்பு அவர்கள் என்றும் சேர்த்துக் கொள்ளுங்கள்.

பதவியை மட்டும் குறிப்பிட்டிருந்தால், உதாரணமாக மேலாளர் என்று இருந்தால், அதற்குப் பின்னால் அவர்கள் என்று சேர்த்துக் கொண்டால் போதுமானது.

அதற்கு அடுத்து எதுபற்றி எழுத நினைக்கிறீர்களோ அதனைப்பற்றி சுருக்கமாக (பொருள்) எழுத வேண்டும்.
உங்களது கடிதத்தை முழுமையாக படிக்காமலேயே உங்களது பிரச்சணையை அதிகாரி உணர்ந்து கொள்ள இது உதவும்.

உங்கள் பிரச்சணை சம்பந்தமாக ஏதாவது செய்தி, ஆணை, சுற்றறிக்கை அல்லது கடிதத்தை நீங்கள் பார்த்திருந்தால், அதனைப்பற்றி பொருளுக்கு கீழே (பார்வை) குறிப்பிட வேண்டும். அவைகள் ஒன்றுக்கு மேற்பட்டிருந்தால், அவைகளை தேதிவாரியாக வரிசைப் படுத்துங்கள். தங்களது பிரச்சணையின் வீரியத்தை அதிகாரிக்கு இது உணர்த்தும்.

அதன்பிறகு மரியாதைக்குரிய ஐய்யா/அம்மா, என்று தொடங்கி தங்கள் பிரச்சணைகளை எழுத வேண்டும். தேவையில்லாத விஷயங்கள் இருக்கக் கூடாது.

நாகரீகமான வார்த்தைகளை பயன்படுத்துங்கள். அடித்தல், திருத்தம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள்.

முடிவில் உங்கள் பிரச்சணையை தீர்ப்பதற்கு அதிகாரியிடம் பணிவுடன் வேண்டுங்கள். அவர்களுக்கு ஆணையிடாதீர்கள்.

அதற்குக் கீழே நாள் மற்றும் இடம் குறிப்பிடுங்கள். அதற்குக் கீழே மறக்காமல் கையொப்பம் செய்யுங்கள்.

இதெல்லாம் நன்கு கற்றைந்தவ்ர் தான் பெட்டிசன் பெரியதம்பி. இதெல்லாம் அவர் இலங்கையில் அவர் பல வருடங்கள் வேலை செய்த அட்டர்னி ஜெனரல் இலாக்காவின் அனுபவம்.

இந்த குறு நாவல் பெட்டிசன் எழுதியதால் வந்த விளைவை எடுத்துச்சொல்கிறது . இனி நீங்கள் பெட்டிசன் எழுத் முன் சிந்தியுங்கள். அதன் பின் எழுதுங்கள்'

நன்றி

# பெட்டிசன் பெரியதம்பி

## அத்தியாயம் 1

### கொழும்பு ஹல்ஸ்டொர்ப்

கொழும்பு 12யில் நீதி மன்றங்கள் உள்ள ஹல்ஸ்டொர்ப் பகுதி, சிறீலங்கா நீதித் துறையின் மையமாக அமைந்துள்ளது. ஒல்லாந்தர் ஆண்ட காலத்தில் வாழ்ந்த கவர்னரான ஜெராட் பீட்டர்சன் (Jerad Peterson) ஹல்ஸ்டோர்ப்பின் பெயர் இப்பகுதிக்குச் சூட்டப்பட்டது. வழக்கறிஞர்களின் அலுவலகங்கள் பல உள்ள இடம். அவர்களது பெயர்ப்; பலகைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு கோணத்தில் தொங்குவது ஒரு தனிக் காட்சி. கருப்புக் கோட்டும், வெள்ளை சேர்ட்டும், காற்சட்டையும,; கறுப்பு டையோடு ஆடை அணிந்து, கைகளில் பைல்களைச் சுமந்தபடி, வாடிக்கையாளர்களுடன் பேசியபடி வழக்கறிஞர்கள் போவதைக் காணலாம். அவர்களுக்குப் போட்டியாக பெண் வழக்கறிஞர்கள் ஒரு பக்கம் காணலாம். அதோடு பொலீஸ் இலாக்காவைச் சேர்ந்த பொலீஸ்காரர்களும்;, இன்ஸ்பெக்டர்களும் மறு பக்கம். குற்றவாளிகளும், குற்றமற்றவர்களும் நிறைந்த இடம். அவர்கள் தலை விதியை நிர்ணயிக்கும் இடம் ஹல்ஸ்டொர்ப்.

நீதி வழங்கும் இடத்தில், சடைத்து வளர்ந்த ஒரு அரச மரம். அதன் கீழ் ஒரு புத்தர் சிலை. தமக்கு நல்ல தீhப்பு கிடைக்கவேண்டும்; என்று புத்தர் பெருமானை வேண்டி நிற்போரையும் காணலாம். இதை விட பெட்டிசன்கள் எழுதுவோரின் டைப்ரட்டர்களின் சத்தங்கள் ஒரு பக்கம். ரிட்டைரான பல அரச ஊழியர்கள் தங்களுக்குக் கிடைக்கும்

பென்சனோடு அதிக பணம் சம்பாதிக்க, பெட்டிசன் எழுதும் தொழிலைச் செய்தனர். இவர்களில் பலர், நீதி மன்றங்களில் லிகிதர்களாக கடமையாற்றி, சட்ட நுனுக்கங்களை அறிந்தவர்கள். வேலை செய்யும் போது பெட்டிசன்கள் எழுதிப் பழக்கப்பட்டவர்கள். சிலர் தமிழ், ஆங்கிலம், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளிலும் எழுதக் கூடியத் திறமைசாலிகள்.

இவர்களில் "பெட்டிசன் பெரி" என்று பலராலும் அழைக்கப்படும் பெரியதம்பியும் ஒருவர். அவருக்கு வயது அறுபத்தைந்து மட்டில் இருக்கும். முப்பத்தைந்து வருடங்கள்; அரசாங்கத்துக்கு மாடாய் உழைத்து ஓய்வு பெற்ற அரசாங்க ஊழியர். அவரோடு சேர்ந்து சேவை செய்த அரசாங்கத்தால் கொடுக்கப் பட்ட கருப்பு நிறத் தோல் பை. பல நீதிமன்றங்களிலும், அட்டேர்னி ஜெனரலின் அலுவலகத்திலும் வேலை செய்த அனுபவசாலி பெரி . ரிட்டையரான பின் தொடர்ந்து வேலை செய்யா விட்டால் அவருக்கு ஏதோ பயித்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. மட்டக்களப்பை பிறப்பிடமாக கொண்ட பெரியதம்பிக்கு, இளப்பாறிய பின்னர் சொந்த ஊருக்கு திரும்பிச் செல்ல விருப்பமில்லை. கொழும்பில் பல வருடங்கள் வாழ்ந்தவர். மூன்று மொழிகளும் நன்றாகத் தெரிந்தவர். மனைவி ஈஸ்வரியைக் காதலித்து திருமணம் செய்தவர். தன் மனைவி; ஈஸ்வரி, மகன் கணேசன் , சாந்தியோடு பெரியதம்பி கொட்டாஞ்சேனையில் உள்ள ஒரு மூன்று அறைகளைக் கொண்ட அப்பாhட்மெனடில் வாழ்ந்துவந்தார்.

மகன் கணேஷ், மருந்துவகைகளை விற்கும் மெடிக்கல் சேல்ஸ்மனாக (Medical Sales Representative) வேலை பார்த்துவந்தான். பெரிக்கு திருமணமாகாத இரு பிள்ளைகள் தான் உலகம். அவர்களுக்குத்

திருமணமாகாததையிட்டு பெரிக்கு பெரும் கவலை. தன் உழைப்பின் ஒரு பகுதியை மகள் சாந்தியின் திருமணத்துக்கு சீதனமாக சேர்த்து வந்தார்.

## அத்தியாயம் 2

### பெரியதம்பி

மடித்து வைக்கக் கூடிய மேசையை, தினமும் வேலை செய்யும்; இடத்தில,; பெரி பிரித்து வைத்தார். அந்த மேசையை வேலை முடிந்து வீடு திரும்ப முன் மடித்து> அருகில் உள்ள சோமசிரியின் தேனீர் கடையில், ஓரமாக வைத்துவிட்டு போவார். சோமசிரியை பெரிக்கு வேலை செய்த நாட்கள் முதல் கொண்டே தெரியும். வேறு எவரையும் தான் வேலை செய்யும் இடத்தை ஆக்கிரமிக்க விடமாட்டார். இலகுவில் கையில் எடுத்துச்செல்லக் கூடிய, இரைச்சல் இல்லாத, பல வருடங்கள பாவித்த ரெமிங்டன் டைப்ரட்டரையும், தேவையான பேப்பர்களையும், கார்பனையும் எடுத்து மேசையில் வைத்தார். ரெமிங்டன் டைப்ரட்டர், அவர் ரிட்டையரான போது, அவரோடு வேலை செய்தவர்கள் தங்கள் அன்பளிப்பாக அவருக்கு கொடுத்தது.

பெரி வந்ததைக் கண்ட சோமசிரியின் தேனீர்கடையில் வேலை செய்யும் பையன் சிறிசேனா, வழக்கம் போல் பெரிக்கு பிடித்தமான இஞ்சி போட்டத்தெனீருடன் அவரிடம் வந்தான். சிறிசேனா கொடுத்த தேனிரை அருந்திவிட்டு பெட்டிசன் எழுத் பெரி தயாரானார்.

ஏற்கனவே அவரிடம் பெட்டிசன் எழுதுவதற்காக ஒருவர் காத்துக் நின்றார். ஒரு நளைக்கு குறைந்தது பத்து பேராவது பெட்டிசன் எழுதித் தரும்படி பெரியிடம் வருவார்கள். அதனால் அவருக்கு சில நாட்களில் குறைந்தது ஐந்நூறு ரூபாய்களுக்கு மேல்; வருமானம் கிடைத்தது.; பெட்டிசன் எழுதி; மாதாந்தம் கிடைக்கும் வருமானம் சில மாதங்களில் பெரிக்கு கிடைக்கும் பென்சனை விட அதிகமாகவும் இருக்கும்.

மனுக்களைச், சுருக்கமாகவும், தெளிவாகவும், இலக்கணப் பிழையின்றி, சட்டரீதியாக எழுதும் திறமை படைத்தவர். மனுக்கள் மட்டுமன்றி சில முக்கிய பத்திரங்களைப் பூர்த்தி செய்து கொடுப்பதிலும் கை தேர்ந்தவர்.

பெரிக்கு தான் மனுக்கள் எழுதி வென்ற கேசுகளைப் பற்றி அடிக்கடி நண்பர்களுக்கு சொல்லிக்காட்டுவதில் மனத்திருப்தி;. அதில் ஒரு கேஸ், அவரோடு வேலை செய்த பர்னாந்தோவுடையது. கோபக்காரனான பர்னாந்தோவுக்கு பெரியோடு நெருங்கிய சினேகிதன்;. 1983ஆம் நடந்த இனக்கலவரத்தின் போது பெரியைப் பாதுகாப்பாக அவர் வீட்டுக்கு ஆபிசில் இருந்து கூட்டிச் சென்றவன் பர்னாந்து. அந்த உதவியைப் பெரி மறக்கவில்லை. அதுமட்டுமல்ல, தான் எழுதிய கடிதங்களை பெரிக்கு காட்டி அபிப்பிராயம் கேட்காவிட்டால் பர்னாந்தோவுக்கு திருப்தியில்லை.

ஒரு நாள்; பிரதம லிகிதர் மகிந்தா, பர்னாந்தோ முக்கிய பைல் ஒன்றைத் தொலத்துவிட்டதற்காக, பலருக்கு முன் , பர்னாந்தோவை தாறுமாறாகப் பேசினார். இருவருக்கு மிடையேலான வாக்குவாதம் முற்றியபோது பர்னாந்தோ கோபம் மீறி பேப்பர் வெயிட்டால் பிரதம லிகிதர் மகிந்தாவை தாக்கினான். இச்சம்பவத்தால், பர்னாந்தோ தற்காலிகமாக வேலையில் இருந்து நிறுத்தப்பட்டான். பர்னாந்தோவை தற்காலிகமாக வேலையில் இருந்து நிறுத்தியதை ஆட்சேபித்து மேலிடத்துக்கு தக்க காரணங்களோடு மனு எழுதி, திரும்பவும் பர்னாந்தோவுக்கு வேலை எடுத்துக்கொடுத்தவர் பெரி.

இரயில்வே இலாக்காவில் ரம்பாலா என்பவர் ஜெனரல் மனேஜராக இருந்த காலம் . அக்காலத்தில் ரத்தினம் ரத்மலானையில் போர்மானாக

வேலை செய்தவர் .வேலையில் கெட்டிக்கார் . மதுவுக்கு அடிமையான அவர் ஒரு போதும் வேலைக்கு நேரத்துக்கு போவது கிடையாது. ஒரு நாள்

ரம்பாலா காலை வோர்க்சொப்புக்கு போனபோது ரத்தினம் தாமதித்து வேலைக்கு வந்ததைக் கண்டு அவரிடம் காரணம் கேட்டதுக்கு பிடிவாதக்காரன் ரத்தினம் ரம்பாலாவோடு வாக்குவாதம் செய்தான். அதை காரணமாக வைத்து ரத்தினத்தை வேலையில் இருந்து ஒரு வருடம் தற்காலிகமாக ரம்பாலா நிறுத்தினார் . அந்த கேசுக்கும் அப்பீல் எழுதிக் எடுத்து கொடுத்து ரத்தினதுக்கு வேலையும் அரியர்ஸ்சும் கிடைக்கச் செய்தவர் பெரி.

சுங்க இலாக்கவைச் சேர்ந்த அதிகாரியான சுமதிபாலா, வணிகர் ஒருவரிடம் லஞ்சம் வாக்கியதற்காக வேலையில் இருந்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டான். மேலிடத்துக்கு அப்பீல் செய்து சுமதிபாலா வேலையைத் திரும்பவும் பெற அப்பீல் கடிதம் எழுதிக் கொடுத்தவர் பெரி. இப்படி ஒவ்வொன்றும் ஒவவொரு விதமான கேசுகளைக் கையாண்ட அனுபவம் உள்ளவர் பெரி. பல வழக்கறிஞர்களோடு அவருக்குத் தொடர்பு இருந்தது.

# அத்தியாயம் 3

## தங்கராசா.

பெரியோடு பேச காத்திருந்தவரின் நெற்றியில் இருந்த திருநீறும், சந்தனப்பொட்டும் , அவரைத் தமிழன் எனக்காட்டிக் காட்டிக்கொடுத்துவிட்டது. அவரோடு பெரி தமிழில் பேசத்தொடங்கினார். “என்னோடு என்ன விஷயமாக பேச நிற்கிறீர்” பெரி வந்தவரை பார்த்துக் கேட்டார்.

“ஐயா, என்றை பெயர் தங்கராசா. நான் இருப்பது வெள்ளவத்தையில். பெற்றாவில் ஏற்றுமதி, இறக்குமதி பிஸ்னஸ் செய்கிறன். நீங்கள் பெட்டிசன் எழுதுவதில் கெட்டிக்காரன் என்று லோயர் லோகேந்திரன் சொன்னவர். அது தான் ஒரு பெட்டிசன் எழுத உதவி கேட்டு உங்களிடம் வந்தனான். நீங்கள் தானே பெரியதம்பி என்பவர் ” வந்தவர் பனிவோடுக் கேட்டார்..

“ லோயர் லோகேந்திரனே உம்மை என்னைப் போய் பார்க்கச் சொன்னவர்”? பெரி வந்தவரைக் கேட்டார்.

“ஓம் ஐயா. அவர்தான் என்றை லோயர். லோயர் லோகேந்திரன் என் அண்ணருடைய மருமகன்.”

“ அப்படியா? ஓம் நான்தான் பெரி என்ற பெரியதம்பி. என்ன விஷயம் சொல்லும்”.

“ விஷயம் என் மகள் ராணியைப் பற்றியது. அவளைக் கலியானம் செய்வதாகச் சொல்லி ஒருத்தன் ஏமாற்றிப் போட்டான். ராணியைப் போல இன்னொருத்தியையும் ஏமாத்திப் போட்டான். அவனுக்கு எதிராக ஒரு பெட்டிசன் எழுத வேண்டும்’”

“அப்படியா. நான் இரண்டு பக்கத்தில் பெட்டிசன் எழுத குறைந்தது நூறு ரூபாய் எடுப்பன். பேட்டிசன் இரண்டு பக்கத்துக்கு மேலே எண்டால், அதிக பக்கங்களுக்கு, பக்கத்துக்கு இருபது ரூபாய் வீதம் சேர்ந்து எடுப்பன்.” பெரி தனது பெட்டிசன் எழுதும் கட்டணத்தை, வந்தவருக்கு சொன்னார்.

“காசைப்பற்றிக் கவலைப் படாதையுங்கோ ஐயா. எனக்கு என் மகளை ஏமாற்றியவனுக்கு நல்ல பாடம் படிப்பித்தால் போதும்.”

“சரி முழுக்கதையையும் ஒளிவு மறைவு இல்லாமல் சொல்லும்”. பெரி தனது நோட் புத்தகத்தைத் திறந்து, பேனாவோடு குறிப்பெடுக்க ஆயித்தமானார்.

“ எண்டை மகள் ராணி உதவி அக்கொளண்டானாக வேலை செய்வது சிலேவ் ஐலண்டில் உள்ள கவ்வி இலாக்காவில். வேலைக்கு தினமும் பஸ்சில் போய் வருவாள். ஒருநாள் பஸ் ஸ்டான்டில் அக்கொளண்டானாக லிவர் பிரதர்சில் வேலை செய்யும் ரமேஷ் என்ற இராமலிங்கத்தை ராணி சந்திக்க நேர்ந்தது. தான் ஒரு சார்டட் அக்கொளண்டன் என்று தன்னைப் பற்றி ராணிக்குப் புழுகியிருக்கிறான் ரமேஷ். ராணியும் லண்டன சி.எம.ஏ சோதனைக்குப் படிப்பதால் ரமேஷின் உதவியைத் தன் படிப்புக்காக நாடியிருக்கிறாள். ரமேஷின் பேச்சில் மயங்கிய ராணி, அவன் விரித்த வலையில விழுந்தாள். தனது அக்கொளண்டன்சி நோட்சுகளை தருவதாகச் சொல்லி ராணியை ஏமாற்றி தான் இருந்த அறைக்கு அழைத்துச் சென்றிருக்கிறான் ரமேஷ். ராணியும் படிப்புக்காக அவனை நம்பி அவன் அறைக்குப் போனாள்.

சில நாட்களாக ராணி வீட்டுக்கு தாமதமாக வரத் தொடங்கினாள். ஏன் தாமதமாய் வாராய் என்று என் மனைவி கேட்டதுக்கு தனக்கு ஆபிசிலை வேலை அதிகம். அது முடித்துப் போட்டு வர நேரமாகிறது என்று தாயுக்குப் பொய் சொல்லியிருக்கிறாள். ரமேசோடை தான் கொண்ட உறவு ஆபத்தில் போய் முடியுமேனறறு அவள் அறியவில்லை. தான் ரமேசின் குழந்தையை வயிற்றில் சுமக்கிறதை அறிந்ததும் ரமேசிடம் தன்னை கலியாணம் செய்யும்படி கேட்டிருக்கிறாள். அவன் முடியாது என்று மறுத்துவிட்டான். ராணியோடு ஒன்றாக வேலை செய்யும் லதா என்ற சிங்களப் பெண் தன் சினேகிதியையும் ரமேஷ ஏமாற்றியவன் என்று ராணிக்குச் சொல்லியிருக்கிறாள்.

“ மேலே நடந்ததை விளக்கமாய் சொல்லும்” பெரி; வந்தவரிடம் விபரம் கேட்டார்

“எனக்குத் தெரியாமல், எங்கள் குடும்பவைத்தியரிடம் போய் தன் வயிற்றில் வளரும் கருவைக் கலைக்க உதவும் படி ராணி கேட்டிருக்கிறாள். அவர் மறுத்ததும், ரத்தினம் வைத்தியசாலைக்குப் போய் கருவைக் கலைத்திருக்கிறாள். இதெல்லாம் எனக்கும் என் மனைவிக்கும் தெரியாமல் இது நடந்திருக்கிறது. ஒரு நாள், நான் எனது குடும்பவைத்தியரை சந்திக்க நேர்ந்தபோது போது ராணி தன்னிடம் வந்து, தன்வயிற்றில் வளரும் கருவைக் கலைக்கும் படி கேட்டதாகச் சொன்னார். அவர் சொன்ன கதையைக்; கேட்டதும் எனக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. ராணியை விசாரித்த போது, நடந்த கதை முழுவதையும் சொல்லி அழுதாள.” என்றார் தங்கராசு.

“ பிறகு நடந்தது என்ன”? பெரி ஆவலுடன் கேட்டார்.

“ கலியாணத்தரகர் தம்பையாவிடம் ராமேஸை பற்றி நான் விசாரித்த போது ரமெசை தனக்குத் தெரியுமென்றும். அவனுக்குத் தான் ஒரு பெரிய இடத்தில் கலியாணம் பேசி நடக்கவிருக்கிறது என்றார். ரமேஷ் இன்னும் பல பெண்களை, ராணியைப் போல் ஏமாற்றக் கூடாது என்பதற்காக அவனுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டு;ம் என்று முடிவு செய்தேன். அவனுக்கு எதிராக, அவன் வேலை செய்யும் இடத்துக்கும், அவனுக்கு கலியாணம் பேசி முடிவான பெண் வீட்டாருக்கும்;, ராமேசைப் பற்றி விபரமாய் பெட்டிசன் ஒன்று எழுத வேண்டும். அதுக்குத்தான் உங்களிடம் வந்தனான்” என்றார் பெருமூச்சுடன் வந்தவர்.

பெரி முழுக்கதையையும் கேட்டதும், தங்கராசாவின் மகள் மேல் அனுதாபப்பட்டார்.

“நீர் சொன்ன கதையைக் கேட்டேன். பெட்டிசனை தாயார் செய்கிறேன். எனக்கு மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால் உம்மோடு தொடர்பு கொள்ளுகிறேன். உமது டேலிபோன் நம்பரைத்தாரும்” என்று தங்கராசாவிடம் டெலிபோன் நம்பரைக் கேட்டு, தன நோட் புத்தகத்தில குறித்துக் கொண்டார்.

“ஐயா. எப்ப நான் திரும்பி வர”

“இன்று திங்கட்கழமை. நீர் புதன்கிழமை காலை பதினொரு மணிக்கு வந்து என்னை சந்தியும். பேட்டிசனைத் தயாராக வைத்திருக்கிறன். உமக்கும் சேர்த்து மூன்ற கொப்பிகள் எடுத்துவைக்கிறன். போதும் தானே”

“அது போதும். பேட்டிசனிலை ராணியின்றை பெயர், என்றை பெயர்,.

வீட்டு விலாசம் போடவேண்டாம். அதை நான் எழுதிக்கொள்ளுகிறன். திகதியை மட்டும் குறிப்பிடுங்கள்..”

“ரமேஷ் வேலை செய்யும் லிவர் பிரதர்சின் விலாசத்தையும், ரமேசுக்கு கலியாணம் ஒழுங்கான பெண் வீட்டாரின் விலாசத்தையும் நீரே எழுதிக் கொள்ளும். என்ன சரிதானே?”

“நல்லது ஐயா. ரமேசுக்க ஒரு பாடம் படிப்பித்தால் அது எனக்குப் போதும். இந்தாருங்ககோ அட்வான்சாக பணம்” என்று நூறு ருபாய் நோட்டை பெரியிடம் நீட்டினார் தங்கராசு.

“நீர் சரியான பிஸ்னஸ்மன் என்று காட்டிப்போட்டீர்” என்றார் சிரித்தபடி பணத்தை வாங்கிய பெரி.

“நீங்கள் ஆரம்பத்தில் சொன்னபடி மேலதிக பணம் தேவையானால் பெட்டிசனை வாங்கும் போது தாரன்”. என்றார் தங்கராசு.

“நல்லது. நான் சொன்ன மாதிரி மறக்காமல் புதன்கிழமை வந்து பெடடி;சனை வாங்கிக் கொள்ளும். நான் ரெடியாய் வைச்சிருப்பன்”.

“உங்ளைச் சந்தித்ததில் எனக்கு நல்ல சந்தோஷம். எனக்குத் தெரிந்த வேறு எவருக்காவது பேட்டிசன் எழுதத் வேண்டியிருந்தால் உங்களிடம் அவையளை அனுப்புகிறன்”, என்று பெரியை பாராட்டிவிட்டுச் சென்றார் தங்கராசா.

# அத்தியாயம் 4

## மைத்துனர் மாணிக்கம்

அன்று ஞாயிற்றுக்கிழமை. பெரிக்கு ஓய்வு நாள். பெரியின் சகோதரியின் கணவர் மாணிக்கம், பெரியோடு அவசரமாய் பேச வேண்டு;ம் என்று இரண்டு தடவை போன் செய்ததாக சாந்தி சொன்னாள்.
பெரிக்கும் அவருடைய மைத்துனர் மாணிக்கத்துக்கும் பல காலமாய் பேச்சுவார்த்தையில்லை. தன்றை மகன் கணேசை மாணிகத்தின் மகளுக்கு திருமணம் செய்துவைத்தால் என்ன என்று மாணிக்கத்திடம் பெரி கேட்டபோது, அவர் சொன்ன பதில் பெரியின் மனதை வெகுவாகப் பாதித்துவிட்டது.

"மச்சான், உம்முடைய மகன் ஏதோ பெரிய வேலை செய்கிறமாதிரி எண்டை மகளுக்கு கலியாணம் செய்து வைக்க கேடிறேர். என் மகள் சுகந்தி ஒரு பி ஏ பட்டதாரி ஆசிரியை . உம்முடைய மகன் கணேஷ் என்ன சாதாரண சேல்ஸ்மன் தானே. படித்து பட்டமும் பெறவில்லை அதோடை சுகந்தி அரசில் வேலையும் செய்கிறாள். அவளுக்கு டக்டர், என்ஜினியர், அக்கொளண்டன் என்று பல இடங்களில் இருந்து பேசி வநதிருக்குது. ஒரு சேல்ஸ்மெனுக்கு என்மகளைக் கலியாணம் செய்து கொடுக்க நான் என்ன மடையனே. அதோடை மச்சானுக்கும் மச்சாளுக்கும் இடையே கலியாணம் செய்வது நல்லதல்ல. " என்று முற்றாக மறுத்துவிட்டார் மாணிக்கம்.

"மாணிகத்துக்கு பணம் இருக்கிற திமிர், அவரை அப்படிப் பேசவைத்துவிட்டது. இப்ப அவருக்கு என்னோடை என்னவாம் கதைக்க வேண்டியிருக்கு?" என்றார் மகள் சாந்தியிடம் பெரி.

“ அப்பா, மாணிக்கம் மாமா வந்து உங்களோடை பேசட்டும். என்னவெண்டு அவர் சொல்லப் போவதைப் பொறுமையாய் கேளுங்கோவன். கிட்டத்து சொந்தக்காரர்களை ஒதுக்கி வைக்கக் கூடாது. ஒன்றென்றால் உதவிக்கு ஓடிவருவினம்,” என்றாள் சாந்தி. பெரியின் மனைவி ஈஸ்வரியும் மகள் சொல்வதை ஆமோதித்தாள்.

வேறு வழியின்றி “ சரி சரி அவரை வரச் சொல் “ என்றார் வேண்டா வெறுப்போடு பெரி.

மதிய உணவை முடித்துவிட்டு அன்றைய டெய்லி நியூஸ்; ஆங்கிலப் பேப்பரை வாசித்தபடி, சாய்மானக் கதிரையில் படுத்திருந்தார் பெரி.

“அப்பா மாணிக்கம் மாமாவும் மாமியும் வந்திருக்கினம், என்று சாந்தி சொல்லிவாய் மூட முன்பே:

“டேய் பெரி என்னை என்ன நினைத்தக்கொண்டாய்”? என்ற மாணிக்கத்தின் கோபக் குரல் கேட்டது. டேய் என்று பெரியை மாணிக்கம் அழைத்தது அது தான் முதற்தடவை.
கணவனோடு ஒத்துபாடுவது போல் ”அண்ணை உனக்கேன் இந்த பெட்டிசன் எழுதுகிற வேலை. உனக்கு எங்களிலை கோபம் எண்டால் எங்களுக்கு எதிராகப் பெட்டிசமே எழுதுகிறது. வந்து நேரடியாகக் கதையன்”? என்றாள் பெரியின் சகோதரி.

பெரிக்கு அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று புரியவில்லை.

“ஏன் வீணாகக் கத்துரியல். அப்படி என்ன நடந்தது. விஷயத்தைச் பொறுமையாக சொல்லுங்கோவன்”?, பெரியும் பதிலுக்கு சற்று

கோபத்தோடு தன் குரலை உயர்த்திச் சொன்னார்.

“இங்கைபார் பெரி .இந்தக் கடிதத்தை. நீ தானே எழுதி உண்டை டைப்பிரயிட்டரிலை டைப்செய்தது? முந்தி எண்டை நண்பனுக்கு நீ எழுதிகொடுத்த  பெட்சனோடு ஒப்பிட்டுப் பார்த்தனான். அதே டைப் அச்சுக்கள். அதே ரைட்டிங் ஸ்டைல்.” தான் கொண்டு வந்த கடிதத்தை பெரி பார்ப்பதற்கு மாணிகம் நீட்டினார்.

கடிதத்தை வாங்கி முதல் நான்கு வரிகளை வாசித்தவுடனேயே பெரிக்கு விஷயம் விளங்கிவிட்டது. அது ரமேஷைப் பற்றி தங்கராசாவுக்கு தான் எழுதிக் கொடுத்த பெட்டிசன் அதுவென்று. பெட்டிசனில் தங்கராசாவின் பெயர் இல்லாமல் “பெரியசாமி” என்று தன் பெயரை மாற்றி கையொப்பமிட்டிருந்ததை அவர் எதிர்பார்க்கவில்லை. இப்படி தங்கராசு தன்னை மோசம் செய்வான் என்று தெரிந்திருந்தால் அவன் பெயரைப் போடாமல் கொடுத்திருக்க மாட்டேன.; அப்படி செய்தது நான் விட்ட பிழை. அவனை நம்பி விட்டேன். வாயில் விரலை வைத்து யோசித்தார் பெரி;.

“என்ன மச்சான் யோசிக்கிறீர்?. செய்வதையும் செய்துவிட்டு யோசனை வேறா? உந்தக் கடிதத்திலை குறிப்பிட்ட அக்கொளண்டன் ரமேசுக்கும் என்றைமகள் சுகந்திக்கும் கலியாணம் பேசி ஒழுங்காயிற்று. அதை அறிந்த உமக்கு வயித்தெரிச்சல். அதுக்கு,  இப்படியே இல்லாததும் பொல்லாததுமாய் அந்தப் பெடியனைப் பற்றி எழுதுகிறது. விசாரித்ததில் அவன் நல்ல குணமான பெடியன. நல்ல சாதி.  நல்ல சம்பளம் அவனுக்கு  . உம்மடைய மகனுக்கு எண்டை மகளைக் கொடுக்க நான் சம்மதிக்கவில்லை என்ற ஆத்திரம் உமக்கு” மாணிகத்தின் குரல் பக்கத்து வீட்டுக்கு கேட்கும் அளவுக்கு இருந்தது.

“அண்ணை உனக்கும் எங்களைப் போல ஒருமகள் கலியாணம் செய்ய இருக்கிறாள் என்பதை மறந்துவிடாதே. சுகந்திக்கு பேசி வந்த சம்பந்தம் பெரிய இடத்துச் சம்பத்தம். பெடியனும் நல்ல குணமுள்ள படித்த பெடியன். நல்;ல கொம்பெனியிலை வேலை. பெரிய சம்பளமும் எடுக்கிறான். இதையெல்லாம் தெரிஞ்சுதானே உனக்கு வைத்தெரிச்சல்”, பெரியின் சகோதரி என்றுமில்லாத வாறு பெரிமேல் பொரிந்து தள்ளினாள். இவர்கள் வாக்குவாதப் படுவதைக கேட்டுக் கொண்டிருநத சாந்திக்கு ரமேசின பெயர் அடிபட்டவுடன் விஷயம் விளங்கிவிட்டது. ஏன் எண்டால் அவளையும் ரமேஷ் ஏமாற்றப் பார்த்திருக்கிறான்.

பெரி மனைவியிடம் கேட்டுத் தண்ணீர் வாங்கிக் குடித்தார் .

“மாணிக்கம் உந்த கடிதம் நான் தங்கராசா என்ற வாடிக்கையாளன் ஒருவனுக்கு எழுதிகொடுத்தக் கடிதம். அனை நம்பி, பெயரையும் விலாசத்தையும் அவன் கேட்டபடி நான் போடவில்லை. அதில் தான் கையொப்பம் இடுவதாகச் சொன்னான். எனக்குத் தெரியாது ரமேசை உண்டை மகளுக்கு பேசியருக்கிற விஷயம்.”..

தான் பெட்டிசனை எழுதி ஒரு வாடிக்காயளனுக்குக் கொடுத்ததை பெரி ஒப்புக்கொண்டார்.

பெரியிடம் இருந்து கடிதத்தை விறுக்கென பறித்தபடி “உந்தக் கடிதத்திலை என்ன எழுதியிருந்தாலும் நான் நம்புவதாக இல்லை. இதெல்லாம் எண்டை குடும்பத்தின் மேல் உனக்கு உள்ள பொறாமையினால் நீ செய்த வேலை. என்ன பெட்டிசன் நீ எழுதினாலும் என்றை மகளுக்கும், ரமேசுக்கும் கலியாணம் நடந்தே தீரும்.“ என்று கோபத்தோடு தன் முடிவை சொல்லிவிட்டு மாணிக்கம் வெளியே போனார். மாணிக்கத்தின் மனைவி தன் அண்ணி ஈஸ்வரியோடு

ஒருவார்த்தை கூடப் பேசாமல் கணவனைப் பின் தொடர்ந்தாள்.

“எது எது, எப்ப எப்ப, எப்படி எப்படி, நடக்க வேண்டுமோ, அது அது, அப்ப அப்ப, அப்படி அப்படி நடக்கும். எல்லாமே தலை விதிப்படியே.” என்று தன் வாயுக்குள் முணுமுணுத்தார்; பெரி.

# அத்தியாயம் 5

## முடிவு

“என்னப்பா பெட்டிசன் எழுத போகவில்லையே”? மகள் சாந்தி கேட்டாள்”

“இல்லையம்மா. பெட்டிசன் எழுதி ஏன் பிரச்சனையை வீணாக விலைக்கு வாங்குவான்? . இனி நான் பெட்டிசன் எழுதப் போவதில்லை. படிவங்கள் மட்டுமே நிறப்பிக் கொடுப்பது என் வேலை”

:

“அது நல்ல முடிவு அப்பா. இப்ப எனக்கு ஒரு வேலக்கு ஒரு படிவம் நிறப்பித் தாருங்கோ “

“சரி கொண்மடு வா உன் விபரத்தை” . என்று சொல்லி டிப்ரைட்டரோடு பெரி ஆயித்தம் ஆனார்

டெலிபோன் மணி அடித்ததது

“யார் எண்டு பார் பிள்ளை” : பெரி மகளுக்குச் சொன்னார்

சாந்தி டெலிபோனில் பேசி விட்டு “அப்பா உங்களோடை தரகர் மாமா பேச வேண்டுமாம்:”

“இங்கை டெலிபோனை கொண்டு வா. உன் கலியாணம் விசயமாக பேசப் போன் எடுத்து இருக்கிறார்” . : டெலிபோனை சாந்தியிடம் இருந்து பெரி வாங்கினார்

“ என்ன  தம்பையர் எதாவது , சாந்திக்கு நல்ல மாப்பிள்ளையின் சாதகம் பொருந்தி இருக்கே:”?

:” உங்கடை  மகளுக்கு இல்லை  மகன் கணேசுக்குத் தான்”

“ என்ன சொல்லுறீர். தம்பையர்”

“எல்லாம் உமது சொந்தத்துக்குள் தான் . உம்முடைய  மச்சான் மாணிக்கம்  தன் மகலள்  சுகந்தியை  உமது மகனுக்கு கொடுக் சம்மதமாம். அம்மடைக்கு உம்மோடு கோபத்தில் பேசியதை மனதில் வைத்திருக் வேண்டாமாம்:  தான் நேரே வந்து உங்களிடம் மன்னிப்பு கேட்கத் தயாராம்”

“ தம்பையர்  புதுசாய் ஒரு கதை சொல்லுறீர்  அப்ப அந்த பெடியன் ரமேஷுக்கு என்ன நடந்தது “?

:

அவன் தான் செய்த தவறி  உணர்ந்து யாரோ தங்கராசவின் மகள் ராணியாம் அவளை  மூன்று நாளைக்கு முன், பம்பலப்பிட்டி பிள்ளையார் கோவிலில்  திருமணம் செய்துட்டானாம்.”

:”உண்மையாகவா? :

:நான் ஏன் உமக்கு பெரி பொய் சொல்லப் போகிறேன்: “?

.

“எல்லாமே தலையில்  எழுதியபடி நடக்கும் செய்தி சொன்னதுக்கு நன்றி: தம்பையர்”

“அப்பா பார்த்தியலே நீங்கள் பெட்டிசன் எழுதப் போய், அண்ணாவுக்கு சுகந்தி மச்சாள் எங்கடை வீட்டுக்கு விளக்கு ஏற்றி  வைக்க வரப்போறா . இனி தொடர்ந்து  நீங்கள் ஒரு  நல்ல காரியத்துக்கு பெட்டிசன் எழுதுங்கோ அப்பா” சாந்தி சொன்னாள்.:

பெரி புன்முறுவலோடு மேசையில் இருந்த  தன் ரெமிங்டன் டைப்ரயிட்டரைப் பார்த்தார்.

***

;

:

: